வணிகம்

VANIHAM

கலை - வர்த்தகம்

உள்ளே:-

அரசியல்

பொருளியல்

வணிகமும் நிதியும்

கணக்கியல்

அளவையியலும் விஞ்ஞான முறைகளும்

ஆங்கிலம்

இதழ் 7

விலை 3

வெளியீடு:-
கே. ஜீ'ஸ். இன்ஸ்ரிரியூட்
நல்லூர் -- யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் முதன் முதல்

G. C. E. (A/L)

மாணவர்களது புதிய பாடத்திட்டத்திற்கமைய
மெய்யியற்துறைப் பட்டதாரிகளினல்
வெளியிடப்பட்ட சிறந்தநூல்

குறியீட்டு அளவையியல்
Symbolic Logic

ஆக்கம்

K. T. இராசரெத்தினம் *B. A. (Hons)*
S. லிங்கசாமிசர்மா *B. A. (Hons)*

இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்
சொற்ப பிரதிகள் மட்டுமே
கைவசம் உண்டு.

V. P. P யில் பெற விரும்புவோர் 3/50 முத்திரையுடன்
தொடர்பு கொள்க

பிரதி 11-75

வெளியீட்டாளர்
113, பருத்தித்துறை வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by Mardi

வணிகம்

மலர்: 1
இதழ்: 7 ஆனி - 1982

சஞ்சிகை ஆசிரியர்
கு. குணசிங்கம் *B Com. (Sp. Hons)*

உதவி ஆசிரியர்
அ. சண்முகதாசன் *B. Com.*

நிர்வாக ஆசிரியர்
க. ஐ. பரமானந்தம்

தொடர்பு முகவரி: K. G's. INSTITUTE 113, Point Pedro Road,
NALLUR - JAFFNA.

❋ ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்க கருத்தாக்களே பொறுப்பாவர்

❋ ஆக்கங்களில் கருத்தாக்களின் பெயர் குறிப்பிடப்படாத எந்தவொரு ஆக்கமும் சஞ்சிகை ஆசிரியரது ஆக்கமாக அல்லது தொகுப்பாக அமைந்ததாகும்,

புதிய திருப்பம்

அண்மைக் காலங்களில் வணிகத்தின் பயன்பாடுபற்றிய கருத்துக்கள் இலங்கை முழுவதும் அறிவுசால் பெருமக்களால் தன்னிச்சையாகவே வெளிப்படுத்தப்படும் விடயமாக அமைந்து விட்டது. குறிப்பாக அரசாங்கப் பாடசாலைகளிற்கூட மாணவர்களது கல்வி வளர்ச்சியின் பிரதான பொறுப்பாளர்கள் வணிகத்தைப் பாராட்டும் அளவிற்கு அதன் வளர்ச்சி அமைந்து காணப்படுகின்றது. அறிவுசால் பெருமக்களதும் மாணவர்களதும் மனநிறைவு அதன் வளர்ச்சிப் போக்கின் புதிய திருப்பமாகும்.

புதிய நோக்கின்

க. பொ. த. உயர்தர 82 ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆனி மாதத்திலிருந்து பரீட்சைக்கேற்ற வகையில் புதிய விடயங்களைத் தொகுப்பாகவும், சிறு குறிப்புக்களாகவும் வழங்கவேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் கடந்த காலங்களில் வெளிவந்த தொடர்கட்டுரைகளின் முடிவுப் பகுதியாக ஆறுவது (வைகாசி) இதழ் அமையவேண்டியதாயிற்று தொடர்ச்சியாக வணிகத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு இந்த ஆறுவது இதழ் பல தொடர் விடயங்களின் எல்லையாக அமைந்து அவர்களுக்கு பயன்படவேண்டும் என்ற நோக்கின் பிரதிபலிப்பே அதன் விடய அமைப்பின் தன்மைக்கு அடிப்படையாகும்; வணிகம் தனது விடய அமைப்பில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்தும் போது மாணவர்களது நலனே அடிப்படையாக அமையுமேயன்றி வேறெதுவுமல்ல. ஆறுவது இதழை மட்டும் வாங்கும் மாணவரிலும் பார்க்க அதற்கு முந்திய இதழ்களைத் தொடர்ச்சியாக வாங்கிய மாணவர்களுக்கு அதிகளவு பயன் கொண்டதாக அவ்விதழ் அமைந்துள்ளதென வணிகம் கருதுகிறது.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதன ஒதுக்கங்கள்
— உருவாக்கமும் பயன்பாடும்

கு. குணசிங்கம் *B. Com. (Sp. Hons)*

மூலதன ஒதுக்கம் எனும் பதமானது வழக்கமாக, இலாப நட்டக் கணக்கினூடாகப் பகிரப்பட முடியாத ஒதுக்கம் என வரையறுக்கப்படுகின்றது. பங்கிலாபமாகப் பகிரக்கூடிய ஒதுக்கங்கள் தவிர்ந்த ஏனைய ஒதுக்கங்கள் யாவும் இத்தகைய ஒதுக்கங்களாகும். வியாபார நிறுவனம் ஒன்றின் வியாபார இலாபத்திலிருந்தே பங்கிலாபம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் மூலதன ஒதுக்கங்களில் இருந்து பங்கிலாபம் வழங்கப்படலாகாது எனவும் கம்பனிகள் கட்டளைச்சட்டம் பணிக்கின்றது. மூலதன ஒதுக்கம் வருமான ஒதுக்கம் என்பவற்றின் பாகுபாடானது கம்பனிக் கணக்குகளைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் உடையனவாகின்றன

கம்பனியொன்றின் குறிப்பிட்ட சில இலாபங்கள் மூலதன ஒதுக்கத்தின் தன்மையைப் பின்வரும் காரணங்களால் ஏற்றுக் கொள்கின்றன;

1. ஏதேனும் சட்ட ஏற்பாடுகள் இத்தகைய இலாபங்கள் பகிரப்பட முடியாதவை எனப் பணித்திருப்பின்
2. தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் (Dicided Cases) அவற்றின் பகிர்வுத்தன்மையை தடைசெய்தால்.
3. கம்பனியொன்றின் இயக்குனர்கள் ஏதேனும் இலாபங்கள் பகிரப்படக் கூடியவையல்ல என முடிவுசெய்யின்

மேற் கூறப்பட்ட மூன்று காரணிகள் உண்மையில் பகிரக்கூடிய இலாபத்தன்மையுடைய ஒதுக்கங்களைப் பகிரப்படமுடியாத நிலைக்கு மாற்றுவதால் வருமான ஒதுக்கநிலை மாற்றப்பட்டு மூலதன ஒதுக்கத்தன்மையைப் பெறுகின்றன.

மூலதன ஒதுக்கங்கள்

மூலதன ஒதுங்கங்களுக்குப் பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்

1. மூலதன மீட்பு ஒதுக்கநிதி
2. பங்கு வட்டக் க/கு
3. கம்பனி உருவாக்கமுன் கிடைத்த இலாபம்
4. நிலையான சொத்தின் மீள்மதிப்பீட்டினால் அல்லது விற்பனையினால் ஏற்பட்ட இலாபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) மூலதன மீட்பு ஒதுக்க நிதி (CRRF)

மூலதன ஒதுக்கத்தின் பயன்பாடு தொடர்பாக அதிக அளவு வரையறைகளையும் சட்டக் கட்டுப்பாடுகளையும் கொண்ட ஒதுக்கம் இதுவாகும், மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்கும்போது மீட்கப்பட்ட பங்குகளின் மொத்த முகப்பெறுமதிக்கும் மீட்பதற்காக வழங்கப்பட்ட பங்குகளின் முகப்பெறுமதிக்கும் இடையிலான பெறுமதி (ஆங்கிலச் சட்டப்படி) மூலதன மீட்பு ஒதுக்க நிதிக்கு மாற்றப்படல் வேண்டும். இவ்வாறு மாற்றப்படும் தொகையானது வருமான ஒதுக்கங்களில் இருந்து அதாவது பகிரக்கூடிய தொகையில் இருந்து பகிர்வுக்கான தொகை போக மீதித்தொகையில் இருந்து மூலதன ஒதுக்க நிதிக்கு மாற்றப்படல் வேண்டும்; உதாரணமாக ஒவ்வொன்றும் ரூபா 10/- பெறுமதியான 25000 மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்கும்போது மீட்பதற்காக ஒவ்வொன்றும் ரூபா 10/- 10000 சாதாரணப் பங்குகள் ரூபா 12/- படி வழங்கப்பட்டிருப்பின் மீட்கப்படும் பங்குகளின் மொத்த முகப் பெறுமதியான ரூபா 250000/-ல் இருந்து ரூபா 100000/- வைக் கழித்து மீதி ரூபா 150000/- வை பொது ஒதுக்கம், இலாபநட்டக் கணக்கு மீதி என்பவற்றில் இருந்து மூலதன ஒதுக்க நிதிக்கு மாற்றல் வேண்டும். இவ்வாறே மூலதன மீட்புஒதுக்கநிதி உருவாக்கப்படுகின்றது.

மூலதன மீட்பு ஒதுக்க நிதியினை உருவாக்குவதன் நோக்கம்

மூலதன மீட்பு ஒதுக்க நிதியின் உருவாக்கமானது மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்பதனால் மூலதன அளவில் ஏற்படும் வீழ்ச்சியை வருமான ஒதுக்கங்களூடாக ஈடுபடுத்திக்கொள்ளலாகும். வருமான ஒதுக்கங்கள் பகிரப்படக்கூடியவையாயும், அவற்றின் பயன்படும் தன்மை பற்றிய வரையறைகள் அற்றதாயும் காணப்படுவதனால் குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய அதிகளவு வரையறையைக் கொண்ட ஒதுக்கங்கள் அவசியமாகின்றன. ஏனெனில் மூலதன அளவில் ஏற்படும் வீழ்ச்சியானது நீண்டகால நிலையான மூலதனச் சொத்துக்களின்மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அல்லது நிலையான மூலதன அளவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக அமையக்கூடியதாய் இருப்பதால் மூலதனத் தன்மையைக் கொண்ட ஒதுக்கம் ஏற்படுத்தப்படவேண்டியதாகின்றது.

மூலதன மீட்பு ஒதுக்க நிதியின் பயன்பாடு

மூலதன ஒதுக்கங்களில் மிகக்கூடிய அளவிற்கு அதன் பயன்பாடு பற்றிய சட்ட வரையறையைக் கொண்ட ஒதுக்கம் இதுவாகும். இந்த ஒதுக்கமானது மூலதனக் குறைப்பிற்காக அல்லது உபகாரப்பங்குகளை வழங்குவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

(ஆ) பங்கு வட்டம் (SHARE PREMIUM)

வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனியொன்று தனது பங்குகளை அவற்றின் முகப்பெறுமதியிலும் பார்க்கக் கூடிய பெறுமதியில் வழங்கும் போது அவ்வாறு மேலதிகமாக வழங்கும் தொகை வட்டம் எனப்படும். உதாரணமாக ரூபா 10/- பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியான பங்கு ஒன்று ரூபா 12/-படி வழங்கப்படுமாயின் ரூபா 2/- வட்டமாகும். ஒரு கம்பனியின் சாதாரண செயற்பாட்டிற்கு அப்பால் மூலதனக் கொடுக்கல் வாங்கலின் போது ஏற்படும் இலாபம் வருமான இலாபமாகக் கருதப்படலாகாது எனும் விதிக்கிணங்க இவ்வாறு மேலதிகமாகப் பெறப்படும் தொகை பகிரக்கூடியதாக அமைவதில்லை. எனவே இது ஒரு மூலதன ஒதுக்கமாகின்றது.

பங்கு வட்டத்தின் உருவாக்கம்

பங்கு வட்டமானது சாதாரண பங்குகளை அல்லது முன்னுரிமைப் பங்குகளை அவற்றின் முகப்பெறுமதியிலும் பார்க்கக் கூடிய பெறுமதியில் வழங்குவதன் மூலமும் பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மீள வழங்கியதனால் ஏற்பட்ட கழிவு போக மீதித் தொகையை வட்டக் கணக்கிற்கு மாற்றப்படுவதன் மூலமும் உருவாக்கப்படுகின்றது.

பங்கு வட்டத்தின் பயன்பாடு

மூலதனக் குறைப்பு, உபகாரப்பங்கு வழங்கல், என்பவற்றிற்குப் பயன் படுத்தப்படுவதுடன் ஆரம்பச்செலவு, பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வழங்கியதால் ஏற்பட்ட செலவு, கழிவு என்பவற்றைப் பதிவழித்தலுக்கும் பயன்படுத்தலாம். அத்துடன் முன்னுரிமைப்பங்குகளை மீட்கும்போது வழங்கப்பட வேண்டிய வட்டத்திற்கும் தொகுதிக்கடன்களை மீட்கும்போது வழங்க வேண்டிய வட்டத்திற்கும் இப்பங்கு வட்டத்தைப் பயன்படுத்தலாம்.

(இ) கம்பனி உருவாக்க முன் கிடைத்த இலாபம்

ஒரு கம்பனியானது உருவாக்கப்படும் திகதிக்கு முன்னர் ஏதேனும் வியாபாரம் ஒன்றைப் பொறுப்பேற்கலாம். அவ்வாறு பொறுப்பேற்கப்பட்ட வியாபாரமானது ஏற்கனவே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாயும் தொடர்ந்து ஈடுபடுவதாயும் காணப்படும் போது கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்ட நாளில் இருந்து அக்கம்பனி உருவாக்கப்படும் திகதிவரையிலான காலப்பகுதிக்கு அவ்வியாபாரத்தினால் உழைக்கப்பட்ட இலாபம் ஒரு வருமான இலாபமாகக் கருதப்படாது. மூலதன இலாபமாக கருதப்படும். இந்த இலாபமானது பங்கிலாபமாகப் பகிரப்பட முடியாததாகும். அதாவது ஒரு கம்பனியானது சட்டரீதியாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கப்படும்வரை அது இலாபத்தினை உழைக்கலாகாது என்பதனால் அத்தகைய இலாபமானது மூலதன ஒதுக்கமாக்கப்படுகின்றது.

உருவாக்கு முன் கிடைத்த இலாபத்தின் பயன்பாடு

ஒரு கம்பனி வியாபாரம் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது கொள்வனவுக் கைமாற்றாகக் கொடுக்கவேண்டிய தொகையை உடனடியாகச் செலுத்தாது குறிப்பிட்ட காலத்தில் வட்டியுடன் செலுத்தலாம். அவ்வாறு கைமாற்றுத் தொகையானது செலுத்தப்படும் காலம் வரையிலான காலத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகையைச் செலுத்துவதற்கும் இந்த இலாபத்தினைப் பயன்படுத்தலாம். மீதி ஏதேனும் இருப்பின் நன்மதிப்பினைப் பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பதற்குப் பயன்படுத்துவதுடன் பங்கு வட்டத்தினைப் பயன்படுத்தக்கூடிய நோக்கங்களில் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளுக்கு வட்டம் வழங்குதல் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஏனைய மூலதன இலாபங்கள்

மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த பின்வரும் சந்தர்ப்பங்களிலும் மூலதன இலாபங்கள் ஏற்படுவதுண்டு

1. நிலையான சொத்து விற்பனையால் ஏற்படும் இலாபம்
2. வியாபாரம் ஒன்றைக் கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட இலாபம்
3. தொகுதிக்கடன் மீட்பினால் ஏற்பட்ட இலாபம்
4. தொகுதிக்கடனை வட்டத்துடன் வழங்கும் போது கிடைக்கும் வட்டம்
5. பங்குப் பறிமுதலினால் ஏற்பட்ட இலாபம்

நிலையான சொத்து விற்பனை இலாபம்

நிலையான சொத்து ஒன்றினை அதன் கொள்விலையிலும் மேலதிகமான தொகைக்கு விற்பனை செய்யும்போது ஏற்படும் இலாபமானது மூலதன இலாபமா அல்லது வருமான இலாபமா என்பதில் கணக்கியலாளர்களிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. சாதாரண செயற்பாட்டிற்கு அப்பால் வியாபாரமொன்றின் அடிப்படைத் தொழிற்பாட்டிலிருந்து வேறுபடும் நிலையில் நிலையான சொத்து விற்பனை இடம்பெறுவதால் அதனால் ஏற்படும் இலாபம் மூலதன இலாபம் என்பது ஒரு பகுதியினரின் கருத்து ஆனால் விற்பனை செய்யப்படும் சொத்து ஒன்றின் சார்பில் இதுவரையில் வருமான இலாபத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்ட பெறுமானத்தேய்வின் அளவிலும் மேலதிகமாயுள்ள இலாபம் மூலதன இலாபமாயும் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டின் அளவிற்குச் சமமான இலாபம் வருமான இலாபம் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனினும் உயர்தர வகுப்பு மாணவர்களைப் பொறுத்த வரை தனிவியாபாரம், பங்குடமை போற்றவற்றில் இவ்விலாபம் வருமான இலாபமாயும் கம்பனியின் விடயத்தில் மூலதன இலாபமாயும் கருதப்படல் வேண்டும். சட்டப்படி நோக்கும்போது இது மூலதன ஒதுக்கமாகவே கருதப்படுகின்றது.

பறிமுதல் இலாபம்

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் தொடர்பில் பறிமுதல் செய்யப்படும் வரை பெறப்பட்ட தொகையிலிருந்து அப்பங்குகளை மீள வழங்கும் போது ஏற்பட்ட செலவு அல்லது கழிவைப் பதிவழித்த பின்னர் உள்ள மீதித்தொகையையே பறிமுதற் கணக்கில் இருந்து மூலதன ஒதுக்கமாகக் கருதப்படல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளில் ஒருபகுதி மட்டுமே மீள வழங்கப்படின் வழங்கப்பட்ட பங்குகள் சார்பில் ஏற்பட்ட மூலதன இலாபத் தொகை மட்டுமே பறிமுதல் கணக்கில் இருந்து மூலதன இலாபமாக்கப்படல் வேண்டும். பறிமுதற்பங்குகள் யாவும் முற்றாக வழங்கப்படும்வரை பறிமுதற்கணக்கு மீதியை மூலதன ஒதுக்கமாகக்கருதுதலாகாது. அதாவது மீள வழங்கப்படாதபங்குகள் சார்பில் இதுவரையில் பெறப்பட்ட தொகை பறிமுதற் கணக்கில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைக்கம்பனி இலாபங்கள்

துணைக்கம்பனிகளின் இலாபங்கள் அவற்றினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களாக இருப்பின் மட்டுமே பிடிப்புக்கம்பனிகள் அவற்றைப் பகிரக்கூடிய தொகையில் உள்ளடக்கலாம். பங்கிலாபம் அல்லாத துணைக்கம்பனியின் இலாபங்கள் பகிரக்கூடியவையாகக் கருதப்படலாகாது.

மூலதன இலாபங்களைப் பகிரக் கூடிய இலாபமாக்கல்

ஒரு கம்பனியானது, குறிப்பிட்ட சில மூலதன இலாபங்களை பகிரக்கூடிய தொகையாகப் பயன்படுத்த வேண்டுமாயின் பின்வருவன முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

1. அகவிதி அத்தகைய மூலதன இலாபங்களைப் பகிரக்கூடிய தொகையாக மாற்றலாம் என அனுமதி அளித்தல் வேண்டும்.
2. அத்தகைய மூலதன இலாபங்கள் பணமாகத்தேறியதாக இருத்தல் வேண்டும்.
3. கம்பனியின் சகல சொத்துக்களும் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் உள்ள இலாபமாக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய மூன்று விடயங்களும் திருப்திப்படுத்தப்பட்ட பின்னரே அவை பகிரக்கூடியதாகக் கருதப்படலாம்.

பகிரக்கூடிய தொகையாகப்பயன் படுத்தமுடியாது மூலதன ஒதுக்கங்கள்

அகவிதி அனுமதிப்பினும் கூடப்பின் வரும் ஒதுக்கங்கள் பகிரக்கூடிய தொகையாகப் பயன்படுத்தலாகாது.

1. மூலதன மீட்பு ஒதுக்கநிதி
2. பங்கு வழங்கலினால் ஏற்பட்டவட்டம்
3. பறிமுதல்செய்துமீளவழங்கப்பட்டபங்குகளால் ஏற்பட்ட இலாபம்

எனவே இவை ஒருபோதும் மூலதன ஒதுக்கங்கள் என்ற தன்மையிலிருந்து மாற்றமடையாத ஒதுக்கங்களாகும்.

★

ஆனி மாத இதழில் இருந்து ..

ஆனிமாத இதழில் இருந்து ஆவணி மாத இதழ்வரை ஆவணி மாதப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்காகப் பல்வேறு விடயங்களை வழங்க வணிகம் முடிவு செய்துள்ளதால் போட்டிகள், மாணவர் கருத்துக்கள், உங்கள் முடிவு என்ன? எனும் பகுதிகள் மீண்டும் புரட்டாதி மாதத்தில் இருந்தே வெளியாகும்

ஆ—ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்துக்கான வரும் பொதுத் தேர்தல்

யூ. டி. தமீம் *B. A. (Hons)*

ஜனநாயக சோஸலிச குடியரசு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது இப்பொழுதிருந்தே பத்திரிகைகள் பொதுத் தேர்தல் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியதுடன், அரசியல் கட்சிகளும் தங்களது பிரச்சாரங்களை முடுக்கி விட்டுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது. இலங்கையின் கடந்த பாராளுமன்றங்களுக்கென நடத்தப்பட்ட பொதுத்தேர்தல் முறைகளைவிட, வரப்போகும் பொதுத்தேர்தல் முறை வேறுபட்ட ஒன்றுனபடியால், அம்முறையைப் பற்றி அறிந்து கொள்ளுவதில் பொதுசனங்களிடையே மிகுந்த ஆர்வம் உள்ளபடியால் இச்சந்தர்ப்பத்தில் இக்கட்டுரை மிகப் பொருத்தமானதாக இருக்குமென நம்புகிறேன் குறிப்பாக பரீட்சைகளுக்கு தங்களை தயார்படுத்தும் மாணவர்களுக்கு இக்கட்டுரை மிகப்பெருமளவுக்கு துணை புரியும். வாசகர்கள் இலகுவில் விடயங்களை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரசியலமைப்பில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பெருமளவுக்கு தவிர்த்து இலேசான நடைமுறைப் பேச்சு வழக்கு வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளோம்.

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் இலங்கை தேர்தல் மாவட்ட வரையறைக் குழுவினுல் இருபத்திரண்டு (22) தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கு மான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எத்தனை என்பதும் அக்குழுவினுலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க அமைக்கப்பட்ட பல்வேறு தேர்தல் மாவட்டங்களின் தேருநர்களால் தேர்ந்தெடுக்கப்படும். நூற்றுத் தொண்ணூற்று (196) உறுப்பினர்களைக் கொண்டபாராளு மன்றம் என்று இருத்தல் வேண்டுமென அரசிலமைப்பில் கூறப்பட்டுள்ளது. புதிய தேர்தல் முறையின்படி தனிப்பட்டசுயேட்சைவேட்பாளர்கள் போட்டிக்கு நிற்கமுடியாது. அங்கீகரிக்கப்பட்டஅரசியல் கட்சிகள் தான் வேட்பாளர்களைக் கொண்டபட்டியல் முறைப்படி. போட்டியிடமுடியும். வேண்டுமாயின் சுயேட்சைகள் குழுவாக, பட்டியல் தயாரித்துப் போட்டியாடமுடியும். போட்டியிட விரும்பும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக்குழுவும் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படவேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கையுடன் இன்னுமொரு 1/3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு கொண்டதாக பட்டியலைத் தயார் செய்தல் வேண்டும். × என்ற தேர்தல் மாவட்டத்துக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 9 ஆயின் ஒவ்வொரு கட்சியும் 12 வேட்பாளர்களின் பெயர்களை பட்டியலில் குறிப்பிடுதல் வேண்டும் பட்டியலில் வேட்பாளர்களின் பெயர் ஒழுங்கு வரிசை கட்சியிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கட்சிப் பட்டியல் அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவம் எனக் கூறப்படும் இத்தேர்தல் முறையில் வாக்காளன் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடியாது. ஏதாவது விரும்பிய ஒரு கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்குத்தான் அவன் வாக்களிக்க முடியும். வாக்காளனுக்கு வழங்கப்படக்கூடிய வாக்களிப்பு அட்டையில் போட்டியிடக்கூடிய கட்சிகளின் பெயர்களும் சின்னங்களும் மட்டுமே காணப்படும். குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஒரு வாக்காளன் கொடுக்கும் வாக்கு அக்கட்சியினால் வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ள அத்தனை பேரையும் அந்த வாக்காளன் ஆதரிக்கிறான் என்பதைக் குறிக்கும்.

வாக்கு எண்ணிக்கையின் முதற்கட்ட நடவடிக்கையாக குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 1/8 பங்கு கணிப்பிடப்பட்டு அதற்குக் குறைந்த வாக்குகளை ஏதாவது அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு பெற்றிருந்தால் அவை போட்டியிலிருந்து நீக்கப்படுவதுடன் அவைகளால் பெறப்பட்ட வாக்குகளும் மொத்த வாக்குகளில் இருந்து கழிக்கப்பட்டு விடும். இதன் பின்பு கணிப்புக்கு கொள்ளப்படக்கூடிய வாக்குகள்தான் தொடர்புடைய வாக்கு எனப்படும். தொடர்புடைய வாக்கு அறியப்பட்ட பின்பு முடிவானவாக்கு கணிப்பிடப்படும். முடிவானவாக்குஎன்பது ஒரு அங்கத்துவத்தைப் பெறத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கையைக்குறிக்கும். குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கையில் ஒன்றைக்கழித்து வரும் எண்ணால் தொடர்புடைய வாக்குகளைப் பிரிப்பதன் மூலம் முடிவானவாக்கு பெறப்படும். முடிவான வாக்கினால் ஒவ்வொரு அரசியல்கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் பெற்றுக் கொண்ட வாக்குகளை பிரிப்பதன் மூலம் அவைகளுக்குரிய அங்கத்துவ எண்ணிக்கை பெறப்படும்.

கட்சிகளுக்குரிய அங்கத்துவ எண்ணிக்கையை தீர்மானிப்பதில் முதற்கட்ட நடவடிக்கையாக போட்டியிட்ட அரசியல்கட்சிகளில் அல்லதுசுயேட்சைகுழுக்களில் ஆகக்கூடுதலான வாக்குகளைப்பெற்ற கட்சிக்குஅல்லது சுயேட்சைக்குழுவுக்கு ஒரு மேலதிக அங்கத்துவம் வழங்கப்படும், பின்னர் முடிவானவாக்கினால் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றுக் கொண்டவாக்குகளைப் பிரிப்பதனால் கட்சிகளுக்குரிய அங்கத்துவ எண்ணிக்கை பெறப்படும். இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவாக வேண்டிய முழு அங்கத்துவ எண்ணிக்கையும் பெறப்படாதவிடத்து ஆகக் கூடியமீதி வாக்குகளின் அடிப்படையில் மிகுதி அங்கத்துவம் நிரப்பப்படும், மீதி வாக்கு என்பது முடிவான வாக்கினால் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றுக்கொண்ட வாக்குகளைப் பிரித்த சந்தர்ப்பத்தில் எஞ்சி நின்ற வாக்குகள் ஆகும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் பெற்ற அங்கத்துவ எண்ணிக்கை கணிப்பிடப்பட்டதன் பின்பு பட்டியல் ஒழுங்கு வரிசைப்படி தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்கள் பிரகடனம் செய்யப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

× என்ற தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட தொடர்புடைய வாக்கு 2,00,000 எனவும் செய்யப்படவேண்டிய அங்கத்தவர் தொகை 5 எனவும் போட்டியிட்ட அரசியல் கட்சிகளில் A = 90,000 வாக்குகளையும் B = 60,000 வாக்குகளையும் C = 40,000 வாக்குகளையும் பெற்றுள்ளது எனவும் கொள்வோம். இதன்படி A போட்டியிட்ட அரசியல் கட்சிகளில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளதால் அக் கட்சிக்கு மேலதிக ஒரு அங்கத்துவம் வழங்கப்படும். முடிவான வாக்கு 2,00,000 ÷ 4 = 50,000 ஆகும். முடிவான வாக்கினால் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளைப் பிரித்தால் A க்கு 1 அங்கத்துவமும் B க்கு 1 அங்கத்துவமும் C க்கு 1 அங்கத்துவமும் கிடைக்கும். நிரப்பப்படவேண்டிய அங்கத்துவ எண்ணிக்கை 5 இதுவரையில் நிரப்பப்பட்டுள்ளது 4. போட்டியிட்ட அரசியல் கட்சிகளில் மீதி வாக்கு Aக்கே கூடுதலாக உள்ளதால் மிகுதி 1 அங்கத்துவமும் அதற்கே வழங்கப்படும். இதன்படி A எல்லாமாக 3 அங்கத்துவத்தையும் Bயும் Cயும் ஒவ்வொரு அங்கத்துவத்தையும் பெற்றுள்ளன. இதற்கிணங்க A என்ற கட்சியின் பட்டியலில் உள்ள முதல் மூன்று வேட்பாளர்களும் Bயினதும் Cயினதும் பட்டியலில் உள்ள முதலாவது வேட்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டவர்களாக பிரகடனம் செய்யப்படுவர்.

அரசியல் கட்சி	பெற்ற வாக்கு
A	90,000
B	60,000
C	40,000

அங்கத்துவம்	மீதி வாக்கு
1 + 1 + 1 = 3	40,000
1	10,000
1	———

இலங்கையில் பாராளுமன்ற தேர்தலுக்கென அறிமுகம் செய்யப்பட்டுள்ள கட்சிப் பட்டியல் அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ஆதரிப்பவர்கள், இத்தேர்தல் முறை அரசியல் கட்சிகள் தேசிய ரீதியில் பெற்றுக்கொள்ளக்கூடிய மொத்த வாக்குகளுக்கும் பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளும் அங்கத்துவத்துக்கு மிடையில் நீண்டகாலமாக காணப்பட்ட முரண்பட்ட தன்மையை தவிர்க்கும் எனக் கூறுகின்றனர். அத்துடன் பலம் வாய்ந்த ஒரு எதிர்க்கட்சியையும் இத்தேர்தல் முறை வழங்கும் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். ஆயினும் இத்தேர்தல் முறையில் வேறுபல குறைபாடுகளுக்கும் இடமுண்டு என்பதை மறுக்க முடியாது.

1. வாக்காளர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமை கட்டுப்படுத்தப்படுகிறது. வாக்காளர் கட்சியின் முழுப் பட்டியலையும் அப்படியே ஏற்றுக் கொண்டு வாக்களிக்க வேண்டியுள்ளதனால் வாக்காளரினால் விருப்பப்படாத பலரும் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட இம்முறை இடமளிக்கிறது.

2. வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்புகளைக் குறைக்கும். வாக்காளர் தொகை தேர்தல் மாவட்டத்தின் பரப்பு மிகப்பெரியனவாக உள்ளதாலும், பிரதிநிதிகள் வாக்காளர்களினால் நேரடியாக தெரிவுசெய்யப்படாததினாலும் பிரதிநிதிகள் வாக்காளர்களுடன் குறைந்த தொடர்பை வைத்துக்கொள்ளலாம். பிரதிநிதிகள் தங்களுக்குள்ள பொறுப்பை தட்டிக் கழிக்கவும் இது வழியாக இருக்கும் காரணம் ஒரு தேர்தல் மாவட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்துக்கு பலர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதனல்:

3 இத்தகைய தேர்தல்முறையில் அரசாங்க கட்சி பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மை ஆதரவு பெறுவது கடினமானபடியால், காலத்தின் தேவைக்கிணங்க அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது போகும்,

4 எந்த ஒரு கட்சியினதும். குழுவினதும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத தனி ஒரு மனிதன் தனித்துப் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்ல இம்முறை சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

5. தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் அமையும் இத்தேர்தல் முறை உண்மையான விகிதாசார பிரதிநிதித்துவமாக அமையவும் முடியாது. தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் கட்சிகள் பெற்றுக் கொள்ளும் வாக்குகளுக்கும் ஆசனங்களுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படும் ஆதலால் முழு நாட்டினதும் கட்சிகளுக்கிடையிலான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும், கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளையும் ஒப்பிடும் போது முரண்பாடுகள் காணப்படும். நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாக கொள்ளப்பட்டு விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யப்படுமாயின் இக்குறைபாடு தவிர்க்கப்படலாம்

6 வாக்காளர் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு தேர்தல் முறையாகவும் இது இல்லை.

7. இத்தேர்தல் முறைப்படி சில சமயங்களில் எந்த ஒரு தனி அரசியல் கட்சியும் பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை ஆதரவைப் பெறத் தவறும் போது அமையக்கூடிய அரசாங்கம் பல கட்சிகளின் சேர்க்கை கொண்ட கூட்டரசாங்கமாக இருக்கலாம். கூட்டுச் சேர்ந்த கட்சிகளுக்கிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றும்போது அரசாங்கம் பலவீனமடையும். அரசாங்கத்தின் பலவீனம் நீண்டகால நோக்குடைய சமூக பொருளாதார அபிவிருத்திகளுக்கு தடையாக அமையக் கூடும்

வணிகம் 8வது இதழ்

வணிகம் 8-வது இதழ் பரீட்சைச் சிறப்பிதழாகும் க. பொ. த. (உயர்தரம்) 82 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது பரீட்சைக்கேற்ற விடயங்கள் வினு விடைகளாக வெளிவரும்

ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலும் விஞ்ஞான முறைகளும்

இயற்கை விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானமும்

S. லிங்கசாமிசர்மா B. A. (Hons)

விஞ்ஞானத்துறைகள் இயற்கைவிஞ்ஞானம் சமூகவிஞ்ஞானம் எனஇருவகையில்பிரிக்கப்படுகின்றன. இவ்வகையில் பிரிக்கப்படுவதற்குஎவ்வித அளவீடுகள் பயன்படுகின்றன. என்பதும்; அவ்வளவீடுகள் இவ்வித பிரிப்புக்கு போதியளவா என்பதும் இக்கட்டுரையில் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இயற்கை விஞ்ஞானத்தையும் சமூகவிஞ்ஞானத்தையும் வேறுபடுத்தும் ஒருசாரார் அவற்றைப் பிரிப்பதற்கென இரு பதங்களுக்கிடையேயான வேறுபாட்டைக் காட்டுகின்றனர் அவர்களால் கையாளப்படும் பதங்களாக விபரிப்பு, விளக்கம் எனும் இரு சொற்கள் காணப்படுகின்றன (இவற்றின் பயன்பாடு விஞ்ஞானம் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கத்தில் இடம்பெறுமாற்றையும் முன்னர் ஒரு கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளோம்) ஸ்ரெப்பிங் (STEBBING) எனும் விஞ்ஞான மெய்யியலாளர் கருத்துப்படி ஒரு விபரிப்பில் எவ்வாறு என்ற வினா முக்கிய இடம் பெறுகிறது. "x" என்பதை விபரிக்கும் போது "x" எவ்வாறு உள்ளது என்பது இருக்கின்றவாறே எடுத்துக் கூறப்படுகிறது அதாவது ஒரு வர்ணனை தரப்படுகிறது. அதேவேளை விளக்கம் ஒன்று இடம்பெறுகின்றபோது எவ்வாறு எனும் வினாவுக்குப் பதில் கூறப்படாமல் ஏன் எனும் வினாவுக்குப் பதில் கூறப்படுகிறது என ஸ்ரெப்பிங் எடுத்துக் காட்டுகிறார். ஆனால் "ஏன்" எனும்பதம் ஸ்ரெப்பிங்கினால் ஒரு பிரத்தியேகமான கருத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதை கவனித்தல் வேண்டும். அதாவது "ஏன்" என்பது என்ன நியாயம் என்ற வகையிலேயே அவரால் கையாளப்படுகின்றது. உதாரணமாக ஒருவர் "x"ஐ விளக்க எத்தனிக்கும் போது "ஏன்" என்ற வினாவுக்குப் பதிலளிக்கிறார் அவ்வாறு பதில் தரும்போது எவ்வாறான நியாயங்களைக்கொண்டு "x"க்கு குறிப்பிட்ட வகையில் பதில் தருகின்றார் என்பதையே ஸ்ரெப்பிங் கருதுகிறார். இவ்வடிப்படையில் இருபதங்களையும் விளங்கிய பின் இயற்கை விஞ்ஞானங்கள் விளக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடவில்லை அவை விபரிக்கின்ற நடவடிக்கையையே கொண்டுள்ளன என எடுத்துக்காட்டுகிறார். அதாவது ஏன் எனும் பதத்திற்குக் கொடுத்த நியாய விளக்கம் எனும் பிரத்தியேகக் கருத்துப்படி நியாய விளக்கங்கள் இயற்கை விஞ்ஞானங்களில் இடம்பெறவில்லை என்கிறார். எனினும் இதற்குமாறாக ஏன் எனும் பதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு காரண விளக்கப்பதிலும் தரப்படலாம். என வேறுசிலர் எடுத்துக்காட்டினர். ஹியூம் (Hume) என்பவருக்குப்பின் ஜே. எஸ். மில் (J S, Mill) வரை காரணம் என்பது ஒருசக்தியல்ல ஒருநிலைமை என்றகருத்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. விளைவு என்ற நிலைமைக்கு காரணம் என்ற நிலைமை இன்றியமையாத போதிய நிலையாகும் (Necessary and Sufficient Condition) காரணம் என்ற நிலைமை ஏற்படும்போதெல்லாம் விளைவு என்ற நிலைமை ஏற்பட்டால் காரணம் விளைவின் போதிய நிலையாகும் விளைவு என்ற நிலைமை ஏற்பட்டு அதே நேரத்தில் காரணம் என்ற நிலைமை நிகழாவிட்டால் அந்த நிலைமை விளைவின் இன்றியமையாத நிலைமையாகாது விளைவு ஏற்படும் போதெல்லாம் காரணம் ஏற்படவேண்டும். இவ்வாறான கருத்தை காரணத்திற்கு அளித்து ஏன் என்ற கேள்வி என்ன காரணத்தினால் என்ற கருத்தைப் பெறுகிறது என சிலர் எடுத்துக்காட்டி இயற்கை விஞ்ஞானங்களில் இவ்வாறான காரணவிளக்கம் இடம்பெறுகிறது என்கின்றனர். இங்கு ஸ்ரெப்பிங்கும் மற்றையோரும் இயற்கை விஞ்ஞானங்களில் நியாய விளக்கம் இடம் பெறுவதில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர். காரண விளக்கத்தை ஏற்போர் சமூக விஞ்ஞானங்களில் நியாயவிளக்கம் இடம் பெறுகிறது என்கின்றனர்.

இதற்கு மாறாககாரணம் பற்றியகருத்து ஜே. எல். மக்கி (J. L. MACKIE) போன்றோரால் ஐனஸ் (INUS) நிலைமை என்றவகையில் எடுத்துக்காட்டி (அதாவது இன்றியமையாத போதிய நிலைமையை – அது என். எஸ். நிலைமை (N. S) எனப்படும். மேலுத் திருத்தியவடிவம்) இவ்வாறான காரண விளக்கம் இடம் பெறலாம் என்பதனால் இவ்வளவீட்டைக் கொண்டு இருதுறைகளை வேறுபடுத்துவது திருப்தியற்றது எனக்கூறுகின்றனர்.

இயற்கை விஞ்ஞானத்தையும் சமூக விஞ்ஞானத்தையும் பிரிக்கும் மற்றொரு அளவீடு நிர்ணயிப்புத்தத்துவம் (Principle of Detexmination) ஆகும். இவ்வாறு நடந்தால் இன்ன விளைவுகள் ஏற்படும் என்ற கணிப்பீடுதான் (நிர்ணயித்தல் தான்) இக்கொள்கையாகும். இதன்படி கணிதத்திற்கு அடுத்த படியாக பௌதீகத்தை விஞ்ஞானமாகக் கொள்கிறார்கள் பௌதீகத்தில்: பௌதீகப் பொருட்களின் நிகழ்வுகளில் இவ்வாறான நிர்ணயிப்பு எடுக்கப்படுவதனால் அவை உறுதியானதாக இருக்கும். உதாரணமாக இந்தப் பொருள் இன்னும் பூமி நோக்கி விழும் நாளையும் விழும் என்று முந்திய அவதானங்களில் இருந்து உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதனால் பௌதீகம், இரசாயனம் போன்றவை உறுதியான விஞ்ஞானங்கள் எனக் கூறப்படுகின்றன. இவ்வியல்பைப் பெற்றுள்ள துறைகள் இயற்கை விஞ்ஞானங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இதுபோன்ற கணிப்பீட்டின் இறுதிப்பாடு சமூக விஞ்ஞானத்தில் குறைவாகும். அவை சமூக தோற்றப்பாட்டை ஆய்வுக்குரிய விடயமாகக் கொண்டிருப்பதனலாகும் இவ்வித நிர்ணயிப்புத் தன்மை விஞ்ஞானத்தின் எதிர்வு கூறலுடன் தொடர்புடையதாகும். பௌதீக விஞ்ஞானங்களாகிய இயற்கை விஞ்ஞானங்கள் தரவுகளைக் கொண்டு முன்கூறக்கூடியதாக இருப்பதினலேயே அவற்றில் நிர்ணயிப்புத் தத்துவம் செயற்படுவதாகக் கொள்ளப்படுகிறது.

எனினும் இதற்கெதிராக வாதிட்ட ஸ்கின்னர் (Skinnar) என்பவர் குறைநிர்ணயிப்புத் தத்துவத்தை (Principle of Inde-terminancy) எடுத்துக் காட்டுகிறார். அதாவது நிர்ணயிப்புத்தத்துவம் பௌதீகத்தின் அணு ஆய்வுவரை சாத்தியப்படக்கூடியதாகும். ஆனால் அணு ஆய்வுக்கப்பால் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு குறைவாக உள்ளது அங்கு குறை நிர்ணயிப்புத் தத்துவந்தான் கூடுதலாக இடம் பெறுகிறது. அதாவது அணுவின் பகுதிகளாக இலத்திரன், நியூத்திரன்களும் அணுவினுள் எத்திசையில் இயங்கும் என்பதை விஞ்ஞானிகளால் தீர்மானிக்க முடியாதுள்ளது. அங்கு ஊகமே இடம்பெறுகிறது. இவ்வித குறை நிர்ணயிப்புநிலை சமூக விஞ்ஞானங்களில் இடம்பெறுகிறது எனவே இருதுறைகளிலும் இவ்விதநிலை காணப்படுகையில் சமூக விஞ்ஞானங்களில் விஞ்ஞான இயல்பு குறைவென ஒதுக்கி சமூக விஞ்ஞானங்களில் இருந்து இயற்கை விஞ்ஞானங்களை வேறுபடுத்துவது திருப்தியானவையல்ல என ஸ்கின்னர் எடுத்துக்காட்டுகிறார். அதேவேளை சமூக விஞ்ஞானங்களில் இப்போதைக்கு முன்கூற முடியாத நிலைகாணப்படினும் அதன் இயல்புகளில் நவீனத்துவம் ஏற்படும்போது முன்கூறக்கூடிய நிலைஏற்படலாம் எனவும் எடுத்துக்காட்டுகிறார்.

இவ்விருதுறைகளையும் வேறுபடுத்தும் மற்றொரு அளவீடாகத் தரப்படுவது பொதுமைப்பாடு என்பதாகும். அதாவது இயற்கை விஞ்ஞானங்கள் பொதுமையோடு தொடர்புடையது எனவும் சமூக விஞ்ஞானங்களில் அவ்வாறு பொதுமைப்பாடான தொடர்பு கிடையாதெனவும் குறிப்பிடப்பட்டு அவைவேறுபடுத்தப்படுகின்றன சமூக விஞ்ஞானங்களினால் தனிமனிதனைப்பற்றிய முடிவுகளை தருவதற்கு அத்தனிமனிதனின் வாள்நாளை முழுமையாக ஆய்ந்து இவர்இப்படி நடப்பதற்கு இவர் சின்னவயதில் இப்படி நடந்தது தான் காரணம் என்று கூறும் முறை யேசாத்தியம்(Case history) என இவ்வள வீட்டிற்கு ஆதாரமாக சமூக விஞ்ஞானங்கள் பற்றி எடுத்துக்காட்டப்படுகிறது. எனினும் இதற்கெதிராகவும் ஸ்கின்னர் ஓர் விடயத்தை முன் வைக்கிறார் அதாவது இயற்கை விஞ்ஞானங்களுள் ஒன்றாகக்கருதப்படும். நவீன மருத்துவதுறையில் முன்பு ஒவ்வொரு தனிப்பட்டநோயாளிகளது நோய்களும் தனித்துவமுடையனவாகக் கருதப்பட்டே ஆராயப்பட்டது. பின்னரே பொதுமைப்பாடடைந்துஇதுபோன்றுசமூகவிஞ்ஞானத்திலும் பொதுமைப்பாடு காலகதியில் ஏற்படலாம் என்பதனால் இக் குறைபாட்டை சமூகவிஞ்ஞானங்கள் மீது சுமத்தமுடியாது என்கிறார்.

பெரும்பாலனவர்கள் குறிப்பிடுகின்ற மற்றொரு கட்டளைகள் ஆய்வுக்குரிய விடயம் என்பதாகும். அதாவது சமூக விஞ்ஞானங்கள் சிக்கலான சமூகத் தோற்றப்பாட்டை விடயமாகவும் இயற்கை விஞ்ஞானங்கள் பெரும்பாலும் பௌதீகத் தோற்பாட்டை கொண்டனவாகவும் உள்ளன என்பதாகும். பௌதீக சடப்பொருட்களை இயற்கைவிஞ்ஞானம் ஆராயக் கூடியதாக இருப்பதினாலேயே முன் கூறல் முதலியனவற்றை செம்மையாக இயற்கை விஞ்ஞானங்களால் நிறைவேற்றமுடிகிறது எனப்படுகின்றது. சிக்கலான சமூகத் தோற்றபாட்டை சமூக விஞ்ஞானங்கள் ஆய்வதனால் விதிகளை தெளிவாக்குதல் இலகுவானதல்ல எனப்படுகிறது. எனினும் இயற்கை விஞ்ஞானங்களில் அணு ஆய்வுக்கப்பால் பௌதீகசட இயல்பு இழக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. எனவே விடயத்தைக்கொண்டு வேறு படுத்துவதிலும் குறைபாடிருப்பதாகக் கூறப்படுகிறது.

விடயத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மற்றொரு இயல்பு எதுவெனில் சமூக விஞ்ஞானங்கள்அகவயமானவை என்பதும் இயற்கைவிஞ்ஞானங்கள் புறவயமானவை என்பதுமாகும். அதாவது சமூகநடத்தையை ஆய்வுபொருளாக சமூக விஞ்ஞானங்கள் கொண்டிருப்பதனால் ஆய்வானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகள் சமூக தோற்றப்பாட்டில் தாக்கங்களை ஏற்படுத்தும் எனவே அவை அகவயமானவை எனப்படுகிறது. உதாரணமாக ஒரு மனிதனது நடத்தையை ஆயும் ஆய்வாளன் இவர் சொனி தொலைக்காட்சிப் பெட்டியே வாங்குவார் என முடிவு கூறுவராயின் சிலவேளைகளில் அவ்வித எண்ணப் போக்கு அம்மனிதனுக்கு இம்முடிவைக் கேட்டபின்னரே ஏற்படலாம். எனவே இங்கு ஆய்வாளனது முடிவு தோற்றப்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தப்படுகிறது ஆனல் இயற்கைவிஞ்ஞானங்களில்பௌதீகப்பொருட்களே ஆய்வுக்குட்படுத்தப்படுவதால் அவைபுறவயமானவை எனப்பட்டன எனினும் அசைவாய்வுக்கப்பால் நியூத்திரன்கள் இலத்திரன்களின் இயக்கம் பற்றிய ஊகம் ஆய்வாளனல் தரப்படும் போது அங்கு அகவயத்தாக்கம் ஏற்படஇடமுண்டு என்பதனல் சமூக விஞ்ஞானங்கள் கொண்டுள்ளதாகக் கூறப்படும் குறைபாட்டை இயற்கை விஞ்ஞானங்களும் பெறுவனவாக அமைகின்றன, எனவே அகவயப். புறவயப்பண்பைகொண்டு அவற்றை வேறுபடுத்துவதிலும் குறைபாடு காணப்படுகிறது. இவ்வகையில் இயற்கை விஞ்ஞானங்களும் சமூக விஞ்ஞானங்களும் வேறுபடுத்துவதற்கென கொள்ளப்படும். அளவீடுகள் காணப்படுகின்றன இங்கு அவற்றை வேறுபடுத்துவதில் அவற்றின் பங்களிப்பும் குறைபாடுகளும்ஓரளவு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன,

அரசியலும் பொருளாதாரமும்

பகிரங்க பொருளாதார முயற்சியின் மூலமும் தனியார் பொருளாதரர முயற்சியின் மூலமும் இவ்விருவகையான முயற்சிகளையும் சமூக குறிக்கோள்களுக்காகவும், பொதுமக்கள நலனுக்காகவும் நெறிப்படுத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் உகந்ததாக இருக்கக்கூடிய அத்தகைய திட்டமிடலையும் கட்டுப்பாடுகளையும் விதித்துரைக்கின்ற சட்டங்களின் மூலமும் நாடுமுழுவதையும் விரைவாக அபிவிருத்தி செய்தல் அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடாகும்.

ஆதாரம்: இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.

— அத்தியாயம் vi - 27 (2) (ச)

அரசியலும் வர்த்தகமும் பகிரங்கக் கூட்டுத்தாபனம்

கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும சட்டத்தினல் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்சப்படுவதும் கொடை என்ற வகையில், கடன் என்றவகையில் அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினல் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியையுடைய ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழுவாகும்.

இ. ச. சோ. கு. அ:

— அத்தியாயம் xxii - (170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்கள அமைப்பு

S. புவனேந்திரராஜா B. Com. (Sp. Hons)

இலங்கையில் திணைக்கள அமைப்பு பிரித்தானிய ஆட்சியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது அரசாங்கம் நிர்வாகத்தை சுலபமாக நடாத்துவதற்காக தகுந்த ஒரு அமைப்பாக இதனை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. திணைக்களங்கள் திறைசேரியின் நிதிஒழுங்கிலும் பொது நிர்வாகத் திணைக்களத்தின் நடைமுறைகளிலும் தங்களது செயற்பாட்டை அமுல் நடத்தி வருகின்றன. திணைக்கள அமைப்பு இரண்டு விதிமுறைகளிலே இன்று இயங்கிவருகின்றது.

1 நிர்வாக நடைமுறைகள் (A. R)
2. நிதி நடைமுறைகள் (F. R)

ஒவ்வொரு அமைச்சுக்களும் பல்வேறு திணைக்களங்களை கொண்டதாக காணப்படுகிறது. அமைச்சர்களின் நேரடி கண்காணிப்பில் திணைக்களத்தலைவர்கள் காணப்படுகின்றார்கள் திணைக்களதலைவரின் மேற்பார்வையின் கீழ் இலங்கை முழுவதிலும் திணைக்கள அமைப்பு பரம்பல் செய்யப்பட்டு இருக்கின்றன இத்திணைக்கள அமைப்பு பின்வரும் நிர்வாக கோட்டுப்படத்தை உடையது.

அமைச்சர்
↓
நிரந்தர செயலாளர்
↓
ஆணையாளர் (திணைக்கள தலைவர்)
↓

பிரதி ஆணையாளர்	பிரதி ஆணையாளர்	பிரதி ஆணையாளர்	பிரதி ஆணையாளர்
↓	↓	↓	↓
(நிர்வாகம்)	(அபிவிருத்தி)	(பிரதேசங்கள்)	(தொடர்புகள்)
↓	↓	↓	↓
உதவி ஆணையாளர்	உதவி ஆணையாளர்	உதவி ஆணையாளர்	உதவி ஆணையாளர்
↓	↓	↓	↓
அலுவலக அதிகாரி	அலுவலக அதிகாரி	அலுவலக அதிகாரி	அலுவலக அதிகாரி
↓	↓	↓	↓
பிரதம லிகிதர்	பிரதம லிகிதர்	பிரதம லிகிதர்	பிரதம லிகிதர்
↓	↓	↓	↓
எழுதுவினைஞர்கள்	எழுதுவினைஞர்கள்	எழுதுவினைஞர்கள்	எழுதுவினைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கையில் காணப்படும் திணைக்களங்கள் பல்வேறு நோக்கங்கள் கருதி இயங்குகின்றன அவற்றை பின்வருமாறு தொகுக்கலாம்.

1. உற்பத்தி கைத்தொழில் திணைக்களம்
   1. புடவைத்திணைக்களம்
   2. சிறுகைத்தொழில் திணைக்களம்
   3. விவசாயத் திணைக்களம்

2. சேவைத்திணைக்களம்
   1. கல்வித்திணைக்களம்
   2. சுகாதாரத் திணைக்களம்
   3. பாதுகாப்புத் திணைக்களம்

3. வர்த்தகம் சந்தைப்படுத்தல்திணைக்களம்
   1. வர்த்தகத்திணைக்களம்
   2. விற்பனை அபிவிருத்தி திணைக்களம்
   3. ஏற்றுமதிகள் மேம்படுத்தல் சந்தைப் படுத்தல் திணைக்களம் (லக்சல)
   4. அரச வழங்கல் திணைக்களம்
   5. உணவுக் கட்டுப்பாட்டுத்திணைக்களம்

4. அபிவிருத்தி திணைக்களம்
   1. கட்டிடத்திணைக்களம்
   2. வீடமைப்புத் திணைக்களம்
   3. நீர் பாசனத் திணைக்களம்
   4. ஆராய்ச்சிச் சேவைத் திணைக்களம் (கமநலசேவை விஞ்ஞானசேவை)

5. நிதித் திணைக்களம்
   1. திறைசேரி
   2. வருமானவரி திணைக்களம்
   3. சுங்கத் திணைக்களம்
   4. காசால் திணைக்களம்
   5. மோட்டார் போக்குவரத்துதிணைக் களம்

திணைக்களங்கள் இன்று பொது நிர்வாக அமைச்சின் நிர்வாகத் தொகுப்புகளில் இருந்தே இயங்கி வருகின்றதுதிணைக்களங் களுக்கு தேவையான ஆளணி விபரங்களை யும் அவற்றின் தெரிவுகளையும் பொது நிர் வாகத்திணைக்களமே பேணி வருகின்றது. பின்வரும் சேவைகளை கொண்ட ஆளணித் தொகுப்பை பொது நிர்வாகத் திணைக்களம் வைத்து இருக்கின்றது.

1. இலங்கை நிர்வாக சேவை
2. இலங்கை கணக்காளர் சேவை
3. இலங்கை கணக்காய்வாளர் சேவை
4. இலங்கை கணக்குப்பதிவாளர் சேவை
5. இலங்கை எழுதுவினைஞர் சேவை
6. இலங்கை காரியாலய சேவை
7. இலங்கை பாதுகாப்பாளர் சேவை
8. இலங்கை அபிவிருத்திஉதவியாளர்சேவை

மேற்கூறிய சேவைகளில் இருந்து ஊழி யர்கள் அரச திணைக்களங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர் அத்துடன் சிலவிசேட உத்தியோகத்தர்களையும் நிர்வாகஇயக்குனர் களையும் அக்குறிப்பிட்ட திணைக்களங்களும் குறிப்பிட்ட அமைச்சும் சேர்ந்துநியமிக்துக் கொள்ளலாம். உதாரணமாக வைத்தியர் களை சுகாதாரத்திணைக்களமும் சுகாதார அமைச்சும் சேர்ந்து நியமித்துக் கொள்ள லாம்.

திணைக்களத்தின் வரவுசெலவுத் திட் டங்கள் கணக்கு விபரங்களை திறைசேரி கட்டுப்பாடு செய்துகொள்ளும் திறைசேரி யின் சுற்றறிக்கையின் படியும் திணைக்கள நிதி நடைமுறைகள் இயக்குவிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறைசேரி ஒவ்வொரு திணைக்களத்திடமும் மாதாந்த நிதி காசு அறிக்கைகளைக் கோருகின்றது இதன்படி நிதிக்கட்டுப்பாட்டினை இது மேற்கொண்டு வருகின்றது. பிரச்சனைகள் தோன்றுமிடத்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களே அதற்கான தீர்வுகளை கண்டு கொள்ளல் வேண்டும்.

ஆரம்ப காலங்களில் எல்லா முயற்சிகளும் திணைக்கள நடைமுறையாக இருந்தன. ஆனால் இந்நடைமுறைகளின் கீழ்பல கட்டுப்பாடுகள் இருப்பதனால் தனித்துவமான முறையில் இயங்க வேண்டும் என்பதற்காக பல திணைக்களங்கள் இன்று கூட்டுத்தாபனங்களாக இயங்கி வருகின்றன. உதாரணமாக சில

1. இலங்கை மின்சாரசபை
2. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
3. பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

இன்நிலைமைக்கு பின்வரும் காரணங்களை கூறிக்கொள்ளலாம்.

1. திணைக்களங்களின் அனுமதிகள் பலர் கைகளில் தங்கியுள்ளது.

2. திணைக்களங்களில் உடனடியாக தீர்மானம் மேற்கொள்ளமுடியாது.

3. அமைச்சர்கள் எல்லாவற்றையும் கவனம் செலுத்த முடியாது.

4. திணைக்கள அமைப்பு பெரிய அமைப்பாக இருக்கின்றது இதனால் கட்டுப்பாடு செய்வது கடினம்.

5. திறமையற்ற கீழ்பணியாளன் இயக்கம் (அரசியல் நிலை)

இன்று பல திணைக்களங்கள் மேற்குறைபாடுகள் நிமிர்த்தம் கம்பனியாகவும் அரசாங்கம் மாற்றியுள்ளது.

உதாரணம்:-

லங்கா கனறீஸ் லிமிடெட் (சந்தைப் படுத்தும் திணைக்களம்) இலங்கை புகையிரத பொறியியல் அமைப்புக் கம்பனி (புகையிரதத்திணைக்களம்) எனவே இத்திணைக்கள அமைப்பு இலங்கையைப் பொறுத்தமட்டில் இன்று பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது. ஏன் என்றால் அரச சேவையில் சீரான கட்டுப்பாடோ திறமையான ஊழியர் வேலைவதிப்பீடோ இல்லாமையாகும். எனவே இந்நிலைமை அபிவிருத்தியடையும் ஒரு நாட்டுக்கு உகந்ததாக மதிப்பிட முடியாது என்பதை யாவரும் அறிந்ததே யாகும்.

அரசியல்

நீதிமன்றம்

நீதி நிர்வாகத்திற்கென உருவாக்கப் பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாயசபை என்று அல்லது நீதிப்பணிகளை அல்லது நீதி மருவிய பணிகளைப் பிரயோகிக்கின்ற வேறேனும் நியாய சபை அல்லது நிறுவனம் என்று அல்லது பிணக்குகளை இணக்கித் தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியாயசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்.

இ ச. சோ. கு அ:
— அத்தியாயம் - 24 (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிருத்திப் பொருளாதாரமும் வெளிநாட்டு உதவியும்

T. N. செல்வகுமார் *B. A. (Hons)*

கைத்தொழிற்றுறை வளர்ச்சி குறைவாகவும் அதே வேளை அப்பொருளாதார அமைப்பில் விவசாயத் துறையின் பங்கு அதிகமானதாயும், பொருளாதாரத்தன்னிறவை கொண்டிராதவையுமான நாடுகள் குறைவிருத்தி நாடுகள் அல்லது வளர்முக நாடுகள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன இக் குறைவிருத்தி நாடுகளை பொறுத்தவரையில் அந்நாடுகளிடையில்காணப்படுப. பொருளாதாரப் பிரச்சினைகள்ஒத்த தன்மையினவாய் பெரும்பாலும் அமைந்திருப்பது அத்தகைய பொருளாதாரப் பிரச்சனைகளைக் கொண்ட நாடுகள் வளர்முக நாடுகள் என்ற நிலையை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமாகவுள்ளதாயும் கருத இடமளிக்கிறது.

குறைந்த வருமானம், குறைந்த அளவிலான வேலை வாய்ப்பு, குறைந்த சேமிப்பு, குறைந்த மூலதன ஆக்கம், குறைவான சமூக வசதிகள், குறைந்த உற்பத்தித்திறன் போன்றவை குறைவிருத்திப் பொருளாதாரங்களின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளாக அமைகின்றன. இத்தகைய பிரச்சனைகளைச் சுயமான தீர்வுக்கு உட்படுத்தக்கூடிய வகையில் வசதி குறைந்த இந்நாடுகளுக்கு வெளிநாட்டு உதவி என்பது மிக இன்றியமையாததாக அமைகின்றது.

வெளிநாட்டு உதவியின் அவசியம்

இந்நாடுகளது மூலதன ஆக்கத்தினது வளர்ச்சி அற்ற நிலையே வெளிநாட்டு உதவியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. மூலதனப் பற்றுக்குறையானது குறைந்த வேலைவாய்ப்பு, குறைந்த வருமானம், குறைந்த சேமிப்பு, குறைந்த முதலீடு என்பவற்றை ஏற்படுத்துகின்றது.

இக்காரணங்களினால் வெளிநாட்டு உதவியானது இப்பொருளாதாரங்களது வளர்ச்சிக்கு முன் தேவையுடையவையாக அமைகின்றது. இதுமட்டுமன்றி இந்நாடுகளின் வளங்கள் சாதனங்கள் என்பவற்றைச் சிறந்த முறையில் பின்பற்றுவதற்கும் தலா வருமான, தேசிய வருமான குறைவிருத்தி நிலையை அகற்றவும் மூலதன உட்பாய்ச்சலை அதிகரித்துக் கொள்ளவும் வெளிநாட்டுதவி அவசியமாகின்றது.

வெளிநாட்டு உதவியின் நோக்கம்

வெளிநாட்டு உதவியின் நோக்கத்தினைப் பொறுத்தவரை குறிப்பாக வளர்முக நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பொறுத்தவரை அந்நாடுகளது பொருளாதார நிலையை உயர்த்தி அவற்றைச் சுயமாக இயங்க வைப்பதாகும். ஒரு பொருளாதார அமைப்பின் தன்மை, மூலதனத்தேவை, தேவைப்படும் அந்நியச் செலாவணியின் அளவு போன்றவற்றின் அடிப்படையில் வெளிநாட்டு உதவி இன்று நிர்ணயிக்கப்படுகின்றது. இவ்வெளிநாட்டு உதவியானது இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பாதிப்படைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளது பொருளாதாரத்தைச் சீர்செய்யு முகமாக உருவாக்கப்பட்ட "மார்ஷல் திட்டத்தின்" கீழான அமெரிக்க உதவியுடன் ஆரம்பமாகியது.

வெளிநாட்டு உதவியின் வகைகள்

நடைமுறையில் வெளிநாட்டு உதவியானது பண்டம், பணம், அறிவியல், தொழில்நுட்பம் என்ற ரீதியில் இடம்பெறுகின்றது. இவைகள் சலுகைகளாக, நிவாரணங்களாக, தனியார் வர்த்தக நடவடிக்கைகளாக, கடன் அடிப்படையிலான இறக்குமதிகளாக, நிதி முதலீடுகளாக அமைகின்றன.

எனினும் தெளிவான முறையில் வெளிநாட்டு உதவி என்பதனை வகைப்படுத்தினால் அவை நன்கொடைகள், கடன்கள், தொழில் நுட்பங்கள், மேலதிக உணவுகள், கல்வி சுகாதார வசதிகள் என்ற பிரிவுகளுள் அடங்கும். இவற்றுள் நன்கொடைகள் என்பவை மீளச் செலுத்தப்படாதவையாகும். இந் நன்கொடைகளுள் நிதி, பண்டங்கள், கல்வி உபகரணங்கள், மருத்துவம் போன்றன உள்ளடக்கப்படலாம். கடன்கள்வட்டியுடன் கூடியவையாக அல்லது வட்டியில்லாக் கடன்களாக, நீண்ட அல்லது குறுங் காலக்கடன்களாக அமையலாம். தொழில் நுட்ப வசதிகள் என்பவை பயிற்றுவிக்கும் வசதிகள், தொழில்நுட்பப் போதனைகள் அறிஞர்களைத் தந்துதவுதல் போன்றதாக அமையும் இவை பிணைக்கப்பட்ட, பிணைக்கப்படாத, கடினமான, இலகுவான உதவிகள் என அவற்றின் தன்மைகளைப்பொறுத்தும் வகைப்படுத்தப்படுகின்றன.

உதவி மூலாதாரங்கள்

வெளிநாட்டு உதவியை வழங்குவதில் நிறுவன ரீதியான மூலாதாரங்களும், வெளிநாட்டு அரசாங்கங்களும் முக்கிய இடம் பெறுகின்றன. நிறுவன ரீதியான மூலாதாரங்கள் சர்வதேச நிறுவனங்களாகும், தனியார் நிறுவனங்களாகவும் உள. எனினும் அதிகமான பங்கைத் தனி அரசாங்கங்களே பெறுகின்றன. நிறுவன ரீதியான கடன் வழங்களில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதி ஆசிய அபிவிருத்தி வங்கி, கொழும்புத்திட்டம் சர்வதேச அபிவிருத்திச்சங்கம் ஐரோப்பிய அபிவிருத்தி நிதி என்பவை குறிப்பிடத்தக்கவைகளாகும். எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் (OPEC) சில நாடுகளின் ஒன்றிணைந்த கூட்டு உதவித்திட்டத்திற்கு உதாரணமாகும்.

வெளிநாட்டு உதவியின் விளைவுகள்

வளர்முக நாடுகளின் சமூக பொருளாதார மேம்பாடு கருதி வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் அவற்றின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் ஏற்படுத்தும் மாற்றத்தின் விளைவை அடிப்படையாகக் கொண்டே இவ்வுதவிகளின் விளைவுகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்க முடியும். வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர்முக நாடுகளது பொருளாதார வளர்ச்சி கருதி வழங்கும் உதவிகள் பிணைக்கப்பட்ட, கடினமான உதவிகளாக அமையும்போது சில பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. பிணைக்கப்பட்ட உதவிகள் எனும்போது உதவி வழங்கும் நாட்டின் பொருட்களையே இறக்குமதி செய்ய வேண்டுமென விதிக்கப்பட்ட கடன்களாகும்.

சிலசந்தர்ப்பங்களில், பொருளாதார சுபீட்சநிலையை அடிப்படையாக வைத்துப் பெறப்படும். உதவிகள் மேலும் மேலும் அவ்வுதவிகளின் தங்கியிருக்கவேண்டிய நிலைக்கு அந்நாட்டை உட்படுத்துவதுமுண்டு வளர்ச்சி அடைந்த நாடுகளின் மேலதிக உற்பத்தியால் பெறப்பட்ட நுகர்வுப் பொருட்கள் வெளிநாட்டுதவியாக வழங்கப்படும் போது இவ் விளைவு ஏற்படுகின்றது, நுகர்பண்டங்களின் மூலமான உதவிகள் உள்நாட்டு உற்பத்தியைப் பாதிப்பதுடன் அந் நாடுகளின் ஏற்றுமதி வாய்ப்பையும் பாதிக்கின்றது.

உதாரணமாக:-

கோதுமை உதவி அரிசி உற்பத்தியைப் பாதிப்பதுடன் அவற்றின் ஏற்றுமதிவாய்ப்பையும் மட்டுப்படுத்துகின்றது. தற்கால வெளிநாட்டுதவியின் போக்கினை நோக்கும் போது உதவி பெறும் நாடுகளைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கான ஒரு கருவியாக வெளிநாட்டுதவி அமைந்துள்ளது. எனக் கருதப்படுகின்றது. பிணைக்கப்பட்ட உதவிகளின்படி வளர்முகநாடுகள் வெளிச் சந்தையில் மலிவானவிலையிற் பெறக்கூடிய பண்டங்களைக் கூடப் பெறமுடியாத நிலையை அனுபவிக்கின்றன முதலாளித்துவநாடுகளது வெளிநாட்டு உதவியின் போக்கினை "சர்வதேச வர்த்தகப் போட்டியில் தம்மை நிலைப் படுத்தவும், வெற்றிபெறச் செய்யவும் முதலாளித்துவ நாடுகள் எடுக்கின்றமுயற்சிகளாகவே வெளிநாட்டு உதவிகள் அமைந்திருக்கின்றது" எனவிளக்கம் கொடுக்கப்படும் அளவிற்கு வெளிநாட்டு உதவியின் தன்மை மாற்றப்பட்டிருப்பது தெளிவாகின்றது. அதாவது வளர்முக நாடுகளைக் கட்டுப்படுத்தும் நவீன காலணித்துவக் கொள்கையாக வெளிநாட்டு உதவி இன்று அமைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

நடைமுறையில் வெளிநாட்டு உதவியானது வளர்முக நாடுகளின் கடன் சுமையை அதிகரிப்பதாகவே காணப்படுகின்றது. வளர்முகநாடுகளது மொத்த வெளிநாட்டுதவியில் நன்கொடைகள் வட்டியில் லாக்கடன்கள் என்பன 10% 20% உட்பட்டவையாகவே காணப்படுகின்றன வளர்முகநாடுகள் தளம்பல் நிறைந்த தமது முதற்பண்ட ஏற்றுமதி வருமானத்தினால் இறக்குமதிகளை ஈடு செய்ய முடியாதநிலையில் ஏற்படும் அந்நியச் செலாவணிப் பிரச்சினையை வெளிநாட்டு உதவிகள்மூலம் தீர்த்து வைக்க முயல்வது அவற்றின் கடன் சுமையை அதிகரிக்கும் நடவடிக்கைகளுள் பிரதானமானதாக அமைகின்றது.

பின்வரும் தரவுகள் இலங்கையின் வெளிநாட்டுக்கடன் சுமையின் அதிகரிப்புப் போக்கினை பிரதிபலிக்கின்றன.

வெளிநாட்டுதவிகள் 1976 - 1980 10 இலட்சம் ரூபாவில்

	1976	1977	1978	1979	1980
மொத்த வரவுகள்	960.4	1,314.7	3,716 6	2,878 4	4,115 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித விற்பனை!

G. C. (A/L) 82

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்கான

விசேட வெளியீடு

(பரீட்சைக்கேற்ப வினாக்களும் — விடைகளும்)

வணிகமும் நிதியும்

வினா - விடை

வெளியீடு இல. 1
" " 2
" " 3

மேலும் 2 வெளியீடுகள் யூலை 82 வரை வெளிவரும்

பிரதி ரூபா 4/50 தபாற்செலவுடன் ரூபா 5/- தபாலில்பெற ரூபா 5/-க்கு தபாற்கட்டளை அனுப்பினால் மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

V. P. P. கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம்

VANIHAM மாதசஞ்சிகை

கலை — வர்த்தகம்

வணிகம்
இதழ்களைப் பெற
வேண்டுமாயின்
தபாற்செலவுடன்
கூடிய பெறுமதிக்கு
தபாற் கட்டளை
அனுப்புக.

வெளிவருகின்றது!

G. C. E. (A/L) 82

மாணவர்க்கான விசேட வெளியீடு

பொருளியல் வினா - விடை

பகுதி 1-ம், 2-ம் உள்ளடங்கியது

(பரீட்சைக்கேற்ப தயாரிக்கப்பட்டது)

இம்மாத நடுப்பகுதியில் எங்கும் கிடைக்கும்

(இது ஒரு வணிகம் வெளியீடாகும்)

முகவரி: Editor
VANIHAM
113, Point Pedro Road,
Nallur — Jaffna.

யாழ் நாவலர் வீதியிலுள்ள தயா அச்சகத்தில் கே. ஜீ'ஸ், இன்ஸ்ரிரியூட் சார்பில் அதன் உரிமையாளர் கு. குணசிங்கம் என்பவரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org